# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**MCOP. No. 171/2017 C/W MCOP No. 170/2017 Date: 22.09.2022**

பெயர் - நற்சோணை - (**PW**1)

2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( சத்தியபிரமாணத்தின் பேரில்)

என்னுடைய வீட்டுக்காரர் ஓட்டிச் சென்ற வாகனம் டிவிஎஸ் எக்ஸ்எல் என்ற வாகனம் என்றால் சரிதான். அந்த வண்டியை ஓட்டுவதற்கு விபத்து சமயத்தில் என்னுடைய கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால், அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா? இல்லையா? என்று எனக்கு தெரியாது. விபத்து பின்னிட்டு அவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா? அல்லது இல்லையா? என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. இந்த மனுவில் காப்பீட்டு நிறுவனம் என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை. தற்போது எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா? என்று தேடிப்பார்த்து தர தயாராக உள்ளேனா? என்றால் தேடிப்பார்த்து தான் தரவேண்டும். என்னுடைய கணவருக்கு ஓட்டுநர் உரிமமே இல்லை எனவும், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டியை ஓட்டத்தெரியாமல் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார். நான் அப்போது அந்த வாகனத்தில் வடக்கு புறமாக திரும்பி உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் கணவருக்கு தலைப்பகுதியில் அடிபட்டுவிட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் என் கணவருக்கு தலையில் அடிப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால், நான் அதை முழுமையாக படித்து பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் என் கணவர் தலைகவசம் அணிந்திருந்தாரா? என்றால், நான் அது பற்றி பதில் சொல்ல விரும்பவில்லை என்று சாட்சி கூறுகிறார். நான் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தேனா? என்றால் இல்லை. எனக்கு விபத்தினால் தலையில் காயம் ஏற்பட்டதா? என்றால், லேசாக காயம் ஏற்பட்டது. எங்கள் மீது மோதியதாக கூறப்படும் வாகனம் எங்களுக்கு எதிர் திசையில் வந்தது. நான் அப்போது வடக்கு திசை நோக்கி அமர்ந்திருந்ததால், எதிர் திசையில் வந்த வாகனம் எப்படி வந்தது என்று தெரியாது என்றால் சரிதான். எனக்கு விபத்தினால் பிளேட் ஸ்க்ரு பொருத்தப்பட்டதாக கூறுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், காப்பீட்டு நிறுவனத்தில் சமசரம் பேசியபோது அவர்கள் அதை பார்த்தார்கள். காப்பீட்டு சமரசம் பேசியபோது சமரசம் பேசியதற்கு ஒத்துக்கொண்டு பின்னர் ஒத்துக்கொள்ளவில்லை. ஸ்க்ருபிளேட்

எடுக்கப்பட்டுவிட்டது என்றால் இல்லை. தற்போதும் ஸ்க்ருபிளேட் உள்ளதா? என்பதை காண்பிக்க நுண்கதிர் படம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஸ்க்ருபிளேட் எடுப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்றால், மருத்துவர் தான் கூற வேண்டும். மற்றொரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன் என்றால், என்னை பொறுத்தளவில் நான் அதிகநேரம் நிற்க வேண்டிய தேவை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதிக நேரம் நடக்க வேண்டிய தேவை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதிக நேரம் நிற்க முடியும் , ஆனால் தற்போது முடியவில்லை. விபத்து சமயத்தில் என் வயது 58 என்றால் சரியல்ல. என் வயது 56, விபத்திற்கு பின் 13 மாதம் வேலை பார்த்தேன். விபத்திற்கு பின் 6 மாதம் வேலை பார்த்தேன். விபத்து சமயத்தில் விடுப்பு சம்பளத்தோடு கூடிய மருத்துவ விடுப்பு என்றால் சரிதான், எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமான பின்பு நான் 2, 3 முறை மருத்துவமனைக்கு சென்றேன், நான் தாக்கல் செய்த ஆவணங்களின் படி 11.7.2017 ல் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஆனால் இருக்கலாம். என்னால் வேலை செய்ய முடியவில்லை என்று நான் பணி ஓய்வு பெற்றேனா? என்றால் இல்லை. முறையாக தான் ஓய்வு பெற்றேன். விபத்து சமயத்தில் உள்ள சம்பளத்தைவிட ஓய்வு பெறும் போது பெற்ற சம்பளம் அதிகம் என்றால் சரிதான். என் கணவர் இளநிலை உதவியாளராக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் வேலை பார்த்தார். அவர் வயதான பின்பும் வேலைக்கு சென்றதால், அவருக்கு ஓய்வுதியம் கிடையாது. நான் கூறும் விதத்தில் வேலை பார்த்ததாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதரன். விவசாய நிலங்கள் தற்போதும் உள்ளன என்றால் சரிதான். தற்போது விவசாய நிலம் என்ன நிலையில் உள்ளது என்றால் அடங்கல் வாங்கி தாக்கல் செய்ய தாயராக உள்ளேனா? என்றால் உள்ளேன். அடங்கலை வாங்கி தாக்கல் செய்தால் விவசாயம் தற்போதும் செய்து கொண்டிருப்பதாக தெரியவரும் என்பதால், தான் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மருத்துவ ரசீதுகள் டுப்ளிகேட் ரசீதுகள் என்றால் சரியல்ல. உண்மையான மருத்துவ ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். ரூ.1,38,510/- ற்கான ரசீது எனவும், அதை வரவழைத்து தாக்கல் செய்ய முடியுமா? என்றால், நான் தாக்கல் செய்த 19 வது மருத்துவ ரசீதில் எஸ்கே பார்மசி ரூ12,655/-. அதே எஸ்கே பார்மசி மருத்துவ ரசீதுகள் தனிதனியாக தாக்கல் செய்துள்ளதால், நான் 2 தடவை கிளைம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆம்புலன்ஸ் பில் ரூ.7500/- என தாக்கல் செய்துள்ளதில் ட்யுப்ளிகேட் ரசீதுகள். அது தனித்தனியாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ட்யுப்ளிகேட் பில்லிலும் தனியாக உள்ளது என்றால் சரியல்ல. விவசாயத்தின் மூலம் மாதம் என் கணவர் ரூ.15000 சம்பாதிப்பதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் எனக்கு எந்தவித ஊனமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. நானும், என் கணவரும் தலைகவசம் அணியாமல் சென்றதால்தான் தான் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

Sd/- நற்சோணை

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge,
Sankari.